# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 25 ஹிஜ்ரி 1436 ரபியுல் அவ்வல் டிசம்பர் 2014

இலவசம்


# நமது மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா



# நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தின் புதிய காட்சிக்கூடம் திறப்பு விழா

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையமான தெலுக் ஆயர் ஸ்திரீட் நாகூர் தர்காவில், நமது பண்பாட்டையும், நற்பணிகளையும் எடுத்துரைக்கும் புதிய காட்சிக்கூடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

நாகூர் தர்கா 1974ஆம் ஆண்டில் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. சீரமைப்புப் பணிகளுக்குப் பிறகு 2011ல் மரபுடைமை நிலையமாக தர்கா திறந்து வைக்கப்பட்டதை அறிவோம். அப்போதே கண்காட்சியகத்துக்கான பாரம்பரிய நினைவுப் பொருட்களைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டது.

மரபுடைமை நிலையத்தின் புதிய காட்சிக் கூடத்தை 6-1-2015 மாலையில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சர் லாரன்ஸ் வோங்கும்; தகவல், தொடர்பு, முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிமும் திறந்து வைத்தனர்.

நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தின் தலைவர் எஸ்.எம்.அப்துல் ஜலீல், செயலாளர் நசீர் கனி, துணைத் தலைவர் ஷரஃப்தீன், பொருளாளர் ராஜா முஹம்மது முதலானோர் உடனிருந்தனர். முயிஸ், தமிழ் முஸ்லிம் அமைப்புகள், சிங்கப்பூர் இந்திய அமைப்புகள், வர்த்தக, கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளும் விழாவில் கலந்து கொண்டனர்.

இந்திய முஸ்லிம் சமூகம் அளவில் சிறிதாக இருப்பினும் செயல்திறனும், துடிப்பும் மிக்கதாக உள்ளது. பல கலாசார சமூகத்தில் இந்திய முஸ்லிம்களின் பங்கு சிறப்பானது என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், புகைப்படங்கள், நமது முன்னோடிகளின் பொருட்கள், நூல்கள் முதலானவை நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரின் பல கட்ட வளர்ச்சி வரலாற்றை இன்றைய தலைமுறையினர் தெளிவாக அறிந்து கொள்வதற்கு காட்சிக் கூடம் உறுதுணையாக அமைந்துள்ளது.

பல இன, பல சமய, சிங்கப்பூரை உருவாக்குவதற்கு உதவிய இந்திய முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றையும், பங்களிப்பையும், மரபுகளையும், சிறப்புகளையும் எடுத்துரைப்பதே



காட்சிக்கூடத்தின் இலக்கு. சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ், தேசிய மரபுடைமைக் கழகம் ஆகியவற்றுடன், இந்திய முஸ்லிம் சமூகப் புரலவர்களின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள இக் காட்சிக்கூடம் இந்திய முஸ்லிம் வம்சாவளியினரின் பன்முனைப் பங்களிப்பைச் சித்திரிக்கும் அரங்கமாகவும், அவர்களின் அரும்பணிகளை எடுத்துரைக்கும் ஆவணக் கருவூலமாகவும் விளங்கும்.

“சிங்கப்பூர் ஐம்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிமிக்க இவ்வேளையில், நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தில் காட்சிக்கூடத் திறப்புவிழா நடைபெறுவது சிறப்புக்குரியது. நாட்டின் கொண்டாட்ட உணர்வுக்கு வலுசேர்க்கும் இந்த விழா பெருமிதம் தருகிறது” என்று மரபுடைமை நிலையத்தின் செயலாளர் நசீர் கனி தமது உரையில் மனநிறைவு தெரிவித்தார்.

கண்காட்சிக் கூடத்தில் இடம்பெறும் புதிய அம்சங்கள் பள்ளிப் பாடத்திட்டத்திற்குத் துணைபுரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அதிபர் திரு. எஸ்.ஆர்.நாதன் 2011ல் மரபுடைமை நிலையத்தை அதிகார பூர்வமாகத் திறந்துவைத்து அரிய ஆலோசனைகளை வழங்கியதை ஹாஜி நசீர் கனி நினைவு கூர்ந்தார். அவர் வழங்கிய ஆலோசனைகளும் வழிகாட்டுதலும் கண்காட்சிக்கூடம் அமைப்பதற்கு உந்துசக்தியாக அமைந்ததாக செயலாளர் நசீர் கனி கூறினார்.

# இளைய தலைமுறையினரை சமூகசேவையில் ஈடுபடுத்துவோம்

## நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தில் கலந்துரையாடல்

நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்தில் இளையர் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் முன்னோட்டமான ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. சிண்டாவுடன் இந்திய முஸ்லிம் சமூகம் இணைந்து 6-12-2014 அன்று நடத்திய தேநீர் விருந்து நிகழ்ச்சியில் 30 இந்திய முஸ்லிம் மாணவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

மாணவர்களின் சாதனைகளை அங்கீகரித்துப் பாராட்டுவதும், சமூக சேவையில் அவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதும் இந்த நிகழ்ச்சியின் இலக்கு. அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் 500க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சிண்டா உன்னத விருதுகளை வழங்கியது. அதன் விளைவாகவே நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தில் தேநீர் உபசரிப்பு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இளைய தலைமுறையினரை சமூக சேவையில் ஈடுபடுத்துவதற்கு புதிய முயற்சிகள் அவசியம் என்று இந்நிகழ்ச்சியில் வலியுறுத்தப் பட்டது. தலைமைத்துவப் புதுப்பிப்பு மிக முக்கிய அம்சம் என்று நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்தின் பொருளாளர் ராஜா முஹம்மது குறிப்பிட்டார். எல்லா நிறுவனங்களும், அமைப்புகளும் சந்திக்கும் தொடர்ச்சியான ஒருசவாலாக அது இருந்து வருகிறது. இவ்வேளையில், நாளைய தலைவர்களை அடையாளம் காணவும், அவர்களைப் பேணி வளர்க்கவும் இது போன்ற கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் வாய்ப்பளிக்கின்றன என்று அவர் கூறினார்.

மற்ற இன, சமூகக் குழுவினரைப் போன்று இந்திய முஸ்லிம்களும் நாட்டு நிர்மாணத்திற்குப் பங்களிப்பதோடு தேசநலனுக்காக நிறைய தியாகங்களைச் செய்துள்ளனர். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நிகழ்ச்சிகள் நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. அவற்றை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதால் சமூகத்துக்கு அவர்களின் பங்களிப்பையும் ஈடுபாட்டையும் அதிகரிக்க முடியும் என்று ராஜா முஹம்மது தெரிவித்தார்.

நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்துடன் இணைந்து செயல்படும் இந்த முயற்சி, ஆக்ககரமான பலனைத் தரும் என்று சிண்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி கே.பரதன் குறிப்பிட்டார். இத்தகைய நிகழ்ச்சிகளினால் மாணவர்கள் சமூகத்திற்குத் துடிப்புடன் பங்காற்றுவதோடு, தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள முடியும் என்றார் அவர்.

கலந்துரையாடல் பயன்மிக்கதாக அமைந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். சமூக சேவையின் முக்கியத்துவத்தையும், அதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வழிமுறைகளையும் அறிந்துகொண்டதாக அவர்கள் கூறினர்.

---

# மலபார் மஸ்ஜித் 50 ஆண்டு விழா




சிங்கப்பூர் மலபார் பள்ளிவாசல் அதன் 50ஆண்டு நினைவு மலரை வெளியிட்டு இருக்கிறது. அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், தலைமை முஃப்தி டாக்டர் முஹம்மது ஃபத்ரிஸ் பகரம், முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஹாஜி அப்துல் ரசாக் மரைக்கார் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

நினைவு மலர் மூலம் மலபார் பள்ளிவாசல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 40,000 வெள்ளி கிடைத்ததாக அதன் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

நீண்டகால சமூகத் தொண்டாற்றிய 9 பேர் விழாவில் சிறப்பிக்கப்பட்டனர். பள்ளிவாசல் தலைவர் ஹாஜி உஸ்மான் அப்துல்லா அவர்களில் ஒருவர்.

மலபார் முஸ்லிம் ஜமாஅத் இப்பள்ளிவாசலை 1956ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கி ஏழு ஆண்டுகளில் நிறைவுசெய்தது. சிங்கப்பூரின் முதல் அரச நாயகர் யூசுப் பின் இஸ்ஹாக் 1963ஆம் ஆண்டில் மலபார் மஸ்ஜிதைத் திறந்து வைத்தார்.

மலபார் மஸ்ஜித், மாணவர்களுக்கான மதரஸா, இளையருக்குரிய கேம்ப் ஷுக்கூர் முகாம் முதலானவற்றை நடத்திவருகிறது.

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்ப தின விழா

ஆண்டுதோறும் குடும்பதின விழாவைக் கொண்டாடி வரும் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 16-11-2014 அன்று இவ்வாண்டு விழாவை கோலாகலமாக நடத்தியது. ஜூரோங்கில் நடைபெற்ற விழாவில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

குடும்பப் பிணைப்பையும், புரிந்துணர்வையும் மேம்படுத்தும் நோக்குடன் சுவையான பல நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன. விடுமுறை நாளை குடும்பத்துடன் கழித்து மகிழ்வதும், மனநிறைவு பெறுவதும் இதன் குறிக்கோள் என்று ஆசிரியரும், சங்கத் தலைவருமான ஹாஜி நசீர்கனி தெரிவித்தார்.

கல்வி, சட்ட அமைச்சுகளுக்கான மூத்த துணை அமைச்சர் குமாரி இந்திராணி ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். கடையநல்லூர் சங்கத்தின் 40 முன்னோடித் தலைமுறை உறுப்பினர்களுக்குப் பாராட்டுக் கேடயமும் அன்பளிப்பும் வழங்கி, அவர்களின் தியாகத்தையும் நற்சேவைகளையும் அமைச்சர் வெகுவாகப் பாராட்டினார்.




குடும்ப உறுப்பினர்கள் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுபெறவும், உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்து உரையாடவும், அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இனிமையான குழு இசைப் பாட்டுப் போட்டிகளும், சிறார் முதல் மூத்த குடிமக்கள் வரை அனைவரும் பங்கேற்கத் தக்க பல்சுவை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அனைவருக்கும் சிற்றுண்டியும் உணவும் வழங்கப்பட்டன.

# ஜாமியாவின் ஒப்பற்ற அன்னை விருது பெற்றார் ஜமீலா அப்துல் கரீம்

ஜாமியா சிங்கப்பூரின் 2014ம் ஆண்டு ஒப்பற்ற அன்னை விருதை திருவாட்டி ஜமீலா அப்துல் கரீம் பெற்றுள்ளார். அதிபர் டோனி டான் ராஃபிள்ஸ் மாநாட்டு மண்டபத்தில் 27-9-2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதை வழங்கினார்.

ஜாமியா சிங்கப்பூரின் சுழற் கேடயத்தையும், ஆறாயிரம் வெள்ளி பரிசுத் தொகையையும் அதிபர் டோனி டானிடமிருந்து பெற்றுக்கொண்டார் ஜமீலா. அவர் தைவானுக்கு நான்கு நாள் சுற்றுலாப் பயணம் சென்று வருவதற்கும் பயணச்சீட்டும் வழங்கப்பட்டது.

ஜமீலா (வயது 53) அவர்கள் தமது குடும்ப மேம்பாட்டுக்காக சமையல், தையல் முதலான தொழில்களில் ஈடுபட்டு முன்னுதாரணமான அன்னையாகத் திகழ்கிறார். கடின உழைப்புக்கு எடுத்துக்காட்டான இவர், மார்கரெட் தாட்சரைப் போன்ற இரும்புப் பெண்மணி என்று சக மாதர்கள் பாராட்டுகின்றனர். சவால்களைச் சமாளித்து தமது ஐந்து பிள்ளைகளைக் கரைசேர்த்தவர் இவர் என்றும்




பாராட்டப்படுகிறார். இவரும் உயர்கல்வி பெற்று உயர்ந்து வருகின்றர்.

விருதுக்குத் தேர்வு பெறாத நான்கு மாதர்களுக்கு $2000 வீதம் அன்பளிப்புத் தொகையும் பயணச்சீட்டும் அளிக்கப்பட்டன.

ஜாமியா சிங்கப்பூர் கடந்த 22 ஆண்டுகளாக ஒப்பற்ற அன்னை விருதை வழங்கி வருகிறது.

# அல்ஹாஜ் எஸ்.எம்.ஜலீலுக்கு அதிபர் விருது

தொழில் முனைவர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் அவர்களின் அறக்கொடை, சமூக நற்பணிகளை அங்கீகரிக்கும் சிறப்பு விருதை அதிபர் டோனி டான் வழங்கியிருக்கிறார்.

இஸ்தானாவில் 15-10-2014 அன்று விருதளிப்பு நடைபெற்றது. ஹாஜி ஜலீல் உள்ளிட்ட 10 புரவலர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

வசதி குறைந்தவர்களுக்கும், சமூக அமைப்புகளுக்கும் நன்கொடை வழங்குவதில் சிறந்த முன்னுதாரணமாக ஹாஜி எஸ்.எம்.ஜலீல் திகழ்ந்து வருவதை நாடறியும். ஆண்டுதோறும் 10 லட்சம் வெள்ளி வரை நிதியுதவி அளிப்பதே தமது தற்போதைய இலக்கு என அவர் கூறுகிறார். எனினும், மென்மேலும் தமது பங்களிப்பு தொடரும், உயரும் என்று உறுதி தெரிவித்தார்.

"கடந்த காலத்தில் வாழ்க்கையில் பல சிரமங்களை அனுபவித்ததால், மற்றவர்கள் சிரமங்களைச் சந்திக்கக்கூடாது என்பதைக் கருதியே உதவிகளை வழங்கி வருகிறேன். பணப் பிரச்சினையால் பிள்ளைகள் கல்வியில் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக பல நிதியுதவித் திட்டங்களுக்கு உதவி ஒத்துழைப்பு நல்கி வருகிறேன்" என்கிறார் அறக்கொடையாளர் அப்துல் ஜலீல்.

அவர் 2011 ஜூலை மாதம் எஸ்.எம்.ஜலீல் அறக்கட்டளையைத் தொடங்கினார். முன்னாள் அதிபர் எஸ்.ஆர்.நாதன் 2011ஆம் ஆண்டில் தொடங்கிய கல்விமேம்பாட்டு நிதிக்கு புரவலர் ஜலீல் $500,000 நன்கொடை வழங்கியதை அனைவரும் அறிவர்.




ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் அவர்கள் 2014ல் பெற்றுள்ள, இரண்டாவது விருது இது. மரபுடைமைப் புரவலர் விருது கடந்த ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டது. கலாசார, சமூக, இளையர் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. லாரன்ஸ் வோங் தேசிய மரபுடைமைக் கழகத்தின் விருதை 25-4-2014அன்று வழங்கிச் சிறப்பித்தார். மொழி, மரபுடைமை உட்பட பல்வேறு நற்பணிகளுக்கு வள்ளல்தன்மையுடன் முன்வந்து தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் ஜலீல் அவர்களின் பங்களிப்பை அங்கீகரித்து அளிக்கப்பட்ட விருது இது என்று தெரிவிக்கப்பட்டது.

புரவலரும் சமூக ஆர்வலருமான எஸ்.எம்.ஜலீல் 2013ல் இரண்டு விருதுகளைப் பெற்றார். முயிஸ் 2013ஆம் ஆண்டுக்கான நற்சேவை விருதை அளித்தது. அவருடைய சமூகத் தொண்டைப் பாராட்டி தப்லா சமூகவெற்றியாளர் விருதும் வழங்கப்பட்டது.

## முயிஸ் கல்வி உதவித் திட்டம்

இஸ்லாமியக் கல்வி போதனை நிதியுதவித் திட்டத்திற்கு முயிஸ் 2014ல் 2 மில்லியன் வெள்ளி வழங்கியிருக்கிறது. உதவி தேவைப்படும் மாணவர்களுக்காக 2004ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

ஆண்டுக்கு 2000 மாணவர்கள் இதன் மூலம் உதவிபெற்று வருகின்றனர். மேலும் அதிகமானோர் உதவி பெறுவதற்கு வசதியாக இத்திட்டத்தை விரிவுபடுத்த முயிஸ் கருதுகிறது. அதன்படி, கல்வி உதவி பெறுவோர் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டு வாக்கில் நான்காயிரமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஹாஜி அப்துல் ரசாக் மரைக்கார் தெரிவித்துள்ளார்.

## நபி மொழி

ஒருவர் குற்றம் செய்தால் அந்தக் குற்றத்திற்கான தண்டனை அவரது குடும்பத்தினருக்கு அல்ல; அவருக்கே அளிக்கப்படும். தந்தை தன் பிள்ளைக்கோ, பிள்ளை தன் தந்தைக்கோ அநியாயம் செய்யவேண்டாம். தந்தையின் குற்றத்திற்காக பிள்ளையோ, பிள்ளையின் குற்றத்திற் காகத் தந்தையோ தண்டிக்கப்படமாட்டார்கள்.

ஆதாரம் : புகாரி

# மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா மறுசீரமைப்புப் பணி

தெலுக் ஆயர் சாலை நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்திற்கு 47,700 வெள்ளி உதவித் தொகையை தேசிய மரபுடைமைக் கழகம் வழங்கியது. தர்காவுக்கு சாயம் பூசி பொலிவூட்டுவதற்கான இந்த உதவியை தர்கா நிர்வாகம் வரவேற்று நன்றி பாராட்டியது.

தேசிய மரபுடைமைக் கழகம் சிங்கப்பூரின் மூன்று தேசிய நினைவுச் சின்னங்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கியிருக்கிறது. நாகூர் தர்கா, சுல்தான் பள்ளிவாசல் ஆகியவை அவற்றுள் அடங்கும். சிங்கப்பூரின் வரலாற்றை நினைவுகூரும் நினைவுச் சின்னங்கள் எதிர்காலத் தலைமுறையினரால் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே இதன் நோக்கம் என்று கழகம் தெரிவித்தது.

மழை போன்ற காரணங்களால் ஈரப்பதம் அதிகரித்து இதற்குமுன் பூசப்பட்ட சாயத்தைப் பாதித்துள்ளது. அதனால் சாய வேலைப்பாடுகளைச் செய்து தரகாவின் தோற்றப் பொலிவை சீரமைப்பது அவசியம். மறுசீரமைப்புக்காக மரபுடைமைக் கழகம் அளித்துள்ள உதவித் தொகை நமது தர்காவின் தோற்றப் பொலிவைத் தொடர்ந்து கட்டிக்காக்க உதவும் என்று தர்கா நிர்வாகக் குழுவின் செயலாளர் அல்ஹாஜ் நசீர்கனி தெரிவித்தார்.





தர்காவின் மறுசீரமைப்புப் பணிகளுக்கான மொத்த செலவு 53,000 வெள்ளி ஆகும் என்றும் அவர் கூறினார்.

தர்காவின் உள்ளரங்கக் காட்சிக் கூடங்கள் சீரமைக்கப்பட்டு, சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் முன்னோடிகளின் பல ஆவணங்களும், நூல்களும் காட்சிக்கு வைக்கப்படும் என்றும் ஹாஜி நசீர்கனி தெரிவித்தார்.

நமது முன்னோர்களால் 1830ல் தெலுக் ஆயர் வீதியில் கட்டி முடிக்கப்பட்ட நாகூர் தர்கா 1974ஆம் ஆண்டில் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. 20-5-2011ல் தர்காவை மரபுடைமை நிலையமாக முன்னைய அதிபர் எஸ்.ஆர்.நாதன் அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். மறுவாரம் ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் மவ்லூது மரபுடைமை நிலைய மேல்தளத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஜமாதுல் ஆகிர் மாதம் கந்தூரி விழாவும் மவ்லூதும் நடத்தப்பட்டு வருகிறது.



# சுல்தான் பள்ளிவாசல் மறுசீரமைப்பு

கம்போங் கிளாம் வட்டாரத்திலுள்ள சுல்தான் பள்ளிவாசலின் மேம்பாட்டுப் பணிகளுக்கு 1.02 மில்லியன் வெள்ளி உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

சாயம்பூசுதல், பழைய மரச்சட்ட வேலைப்பாடுகளை அகற்றுதல், தண்ணீர் சேமிக்கும் முறையை சீரமைத்தல், முதியோர்களுக்கான மின் தூக்கி வசதியை உருவாக்குதல் முதலான பணிகள் மேற்கொள்ளப்படும்.

மூப்படையும் மக்கள் முதலான பல தலைமுறையினரும் பள்ளிவாசலுக்குச் சிரமம் இல்லாமல் வருவதற்கு வசதியாக புதிய மின்தூக்கி அமையும் என்று பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்தது.



தேசிய மரபுடைமைக் கழகம் 2008ஆம் ஆண்டிலிருந்து தேசிய நினைவுச் சின்னங்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறது. இதுவரை 13 நினைவுச் சின்னங்கள் அந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளன.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Maarof Mosque groundbreaking and kiblat direction setting ceremony, 6 Dec 2014



Mosque Management Board investiture, Singapore Islamic Hub, 15 Nov 2014



Graduation ceremonyand dialogue session with S'pore students at Al Azhar Conf. Centre, Egypt, 3 Nov 2014



Singapore pilgrims returning from Hajj, Changi Airport, 27 Oct 2014



Zikral Hijrah 1436 celebrations, 24 Oct 2014



Launch of aLIVE Home Tuition, 18 Oct 2014



Rahmatan Lil Alamin (RLA) blessings to all day, 28 Sep 2014



Launch of Yusof Ishak Mosque roadshow, 22 Aug 2014

# கவிஞர் க.து.மு.இக்பாலுக்கு சிங்கப்பூர் கலாசார பதக்க விருது

கவிஞர் க.து.மு.இக்பாலுக்கு சிங்கப்பூரின் உயரிய கலை இலக்கிய விருதான கலாசார பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது. தேசிய கலைமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த விருதை வழங்கிவருகிறது. அதிபர் டோனி டான் 16-10-2014அன்று மாலை இஸ்தானாவில் விருது வழங்கினார்,

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கவிதைகளைப் படைத்து வரும் க.து.மு.இக்பால் பெற்ற விருதுகள் பற்பல. 2001ல் தென்கிழக்கு ஆசிய ஆசியான் விருதைப் பெற்ற அவர், பல ஆயிரம் கவிதைகளை எழுதியிருக்கிறார். தமிழவேள் விருது, சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகத்தின் கலா ரத்னா விருது, மோண்ட்பிளாங் இலக்கிய விருது ஆகியவை அவர் பெற்ற விருதுப் பட்டியலில் அடங்கும்.

க.து.மு.இக்பால் கடையநல்லூரில் 1940ஆம் ஆண்டில் பிறந்தவர். 1951ல் சிங்கப்பூருக்கு வந்தார். மேக்ஸ்வெல் சாலையில் அப்போது இயங்கிய உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியில் இரண்டாம் வகுப்பில் படித்துவிட்டு கல்வியைத்தொடராமல் சிறுவயதிலேயே வேலைக்குச் சென்றுவிட்டார். அப்போதே கவிதை ஆர்வம் அதிகரித்ததால் கவிதைகளைப் படிக்கத் தொடங்கி, கவிதை எழுதத் தொடங்கினார். திருமணமாகி தந்தையான பிறகு மீண்டும் கல்வியைத் தொடர்ந்தார். தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு சாதனமாக கவிதைத் துறையைப் பயன்படுத்தி வருவதாகக் கூறுகிறார் இக்பால்.

நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளை எழுதிவந்த அவர், சிங்கப்பூர் வானொலியில் "பாடிப் பழகுவோம்" என்ற நிகழ்ச்சிக்கு 1970களிலும், அதற்குப் பிறகும் இருநூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை எழுதினார். இதய மலர்கள், அன்னை, முகவரிகள், வைரக்கற்கள், கனவுகள் வேண்டும் ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டிருக்கிறார் இக்பால். காலைப்பொழுது, நீலக் கண்ணாடி, கவிதை மூச்சு ஆகிய படைப்புகள் தமிழ்ப்பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன.



பல கலந்துரையாடல்களிலும், பயிலரங்குகளிலும் அவ்வப்போது தமது அனுபவங்களை க.து.மு.இக்பால் பயன்மிக்க முறையில் பகிர்ந்துகொண்டிருப்பதை சிங்கப்பூர் இலக்கிய வட்டம் நன்கு அறியும். சிங்கப்பூர் கலை இலக்கிய அணியில் தமக்கென தடமும், முத்திரை




யும் பதித்துள்ள அவருக்கு கலாசார பதக்க விருது வழங்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது என்று சிங்கப்பூர் இலக்கிய, சமூக அமைப்புகள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்துள்ளன.

சிங்கப்பூர் அரசாங்கத்தின் கலாசார விருது பெற்ற கவிஞர் க.து.மு.இக்பாலுக்கு 16 தமிழ் அமைப்புகள் இணைந்து 2-11-2014 ஞாயிற்றுக்கிழமை பாராட்டு விழா நடத்தின. டெஸன்சன் சாலையிலுள்ள அரசாங்க சேவை மன்றத்தில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் பலர் பாராட்டுரை வழங்கினர். அவருடைய 'தண்ணீர்' கவிதை சிங்கப்பூர் பெருவிரைவு வாகனத்திலும்(MRT), ஜெர்மனி EXPO-விலும் இடம்பெற்றதை அவர்கள் குறிப்பிட்டனர்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் விருது பெற்ற கவிஞரைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியை வெளியிட்டது.

சிங்கப்பூர் பெரியார் சேவை மன்றம் 26-10-2014 அன்றுமாலை நடத்திய கி.வீரமணி விருந்தோம்பல் நிகழ்ச்சியின் அங்கமாக க.து.மு.இக்பாலுக்குப் பாராட்டுரைகளை வழங்கியது. சிலர் அவரைச் சிறப்பித்து கவிதைகளைப் படைத்தனர்.

கலாசார பதக்க விருதுக்குரிய மானியத்தைப் பயன்படுத்தி தமது கவிதைகளை ஒன்று திரட்டி ஒரு

# இலக்கியப் பரிசு பெற்றார் ஷாநவாஸ்

எழுத்தாளர் முஹம்மது காசிம் ஷாநவாஸ் 2014 சிங்கப்பூர் இலக்கியப் பரிசு பெற்றிருக்கிறார்.

சிங்கப்பூர் புத்தக மேம்பாட்டுக் கழகம் (NBDCS) தேசிய கலை மன்றத்துடன் (NAC) இணைந்து நான்கு மொழி நூல்களுக்கும் 4-11-2014 அன்று பரிசு வழங்கியது. ஷாநவாஸ் எழுதிய மூன்றாவது கை சிறுகதை தொகுப்பு சிறந்த படைப்பாக நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 10,000 வெள்ளி பரிசுத் தொகை அளிக்கப்பட்டது.

சிங்கப்பூர் பல இன, சமூகப் பின்னணியில் ஷாநவாஸ் எழுதிய 12 சிறுகதைகள் மூன்றாவது கை தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

ஷாநவாஸ் தமிழகத்தின் ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அபிராமம்-நத்தம் எனும் ஊரில் 1959ஆம் ஆண்டு பிறந்தார். திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 1994 வரை இந்திய அரசாங்கத் துறையில் பணிபுரிந்து விட்டு



சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்து வந்த ஷாநவாஸ், உணவகத்தை நடத்திவருகிறார்.

துண்டுமீனும் வன்முறைக் கலாசாரமும் இவர் எழுதிய முதல் நூல். ஒருமுட்டை பரோட்டாவும் சாதா பரோட்டாவும், அயல்பசி ஆகிய கட்டுரைத்தொகுதிகளை வெளியிட்டுள்ள அவருடைய சிறுகதை தொகுப்பே மூன்றாவது கை.

சிங்கப்பூரின் பன்முகக் கலாசார வாழ்வு குறித்து தொடர்ந்து எழுதுவதே தமது இலக்கு என்கிறார் இலக்கியவிருது பெற்ற எழுத்தாளர் ஷாநவாஸ்.

தொகுப்பாக வெளியிட விரும்புவதாகக் கூறினார் கவிஞர் க.து.மு.இக்பால். பல கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களில் எழுத்தாளர் ஜே.எம்.சாலி 2012ஆம் ஆண்டிலும், சிங்கை முகிலன் அப்துல் ரஹ்மான் 1988ஆம் ஆண்டிலும் கலாசாரப் பதக்க விருது பெற்றனர்.

## நபி மொழி

மற்றவர்களிடமிருந்து எப்போதும் தன்னை தனிமைப்படுத்திக் கொள்பவர் பிறரை அவமரியாதை செய்பவராவார். அது ஒரு கட்டத்தில் அவரை ஆணவக் காரராக ஆக்கி, ஆணவக் காரனுக்கு உரிய தண்டனையையே அவருக்குப் பெற்று தந்துவிடும்.

ஆதாரம் : புகாரி

## சிங்கப்பூர் ஹஜ் பயணிகளின் எண்ணிக்கை உயரலாம்

சிங்கப்பூர் 2015ல் அதிகமான ஹஜ் பயணிகளை அனுப்புவதற்கு முயலும். தகவல், தொடர்பு, இஸ்லாமிய விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் இதனைத் தெரிவித்துள்ளார். தற்போது ஆண்டுக்கு 680 சிங்கப்பூர் முஸ்லிம்கள் ஹஜ் பயணம் செய்வதற்கு சவூதி அரேபியா அனுமதிக்கிறது. இந்த எண்ணிக்கையை உயர்த்தும்படி கேட்டுக் கொள்ளப்படும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு நாடு திரும்பிய 120 சிங்கப்பூரர்களை கடந்த அக்டோபர் மாதம் சாங்கி விமான நிலையத்தில் வரவேற்றபோது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஹஜ் பயணிகளுக்கான சவூதி அரேபியாவின் செயல்முறைகள், வசதிகள் குறித்து ஹாஜிகள் தம்மிடம் மனநிறைவு தெரிவித்தனர் என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

# இனிய மீலாது விழாக்கள்

புனித ஹிஜ்ரி 1436 ரபியுல் அவ்வல் மாதத்தில் அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் போற்றும் மவ்லூது நிகழ்ச்சிகளும், மீலாத் விழாக்களும் சிங்கப்பூர் பள்ளிவாசல்களிலும், சமய, சமூக அமைப்புகளிலும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

சிங்கப்பூர் மணிசேஞ்சர்-காசுக்கடை வணிகர்கள் ரபியுல் அவ்வல் பிறை 6 (27-12-2014) மாலையில் ஆறு பள்ளிவாசல்களில் மவ்லூது மஜ்லிஸ் அரங்கை நடத்தினர். சவுத் பிரிட்ஜ் சாலை சூலியா மஸ்ஜித், நார்த் பிரிட்ஜ் சாலை சுல்தான் மஸ்ஜித், பீச் சாலை ஹஜ்ஜா ஃபாத்திமா மஸ்ஜித், சிராங்கூன் சாலை அங்கூலியா மஸ்ஜித், டன்லப் சாலை அப்துல் கபூர் மஸ்ஜித், பென்கூலன் சாலை பென்கூலன் மஸ்ஜித் ஆகியவற்றில் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பெயரால் மவ்லூது ஓதப்பட்டது. அவற்றில் கலந்து கொண்ட அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது. தாருல் இஹ்சான் குழந்தைகள் காப்பக சிறுவர், சிறுமியர்களுக்கும் உணவு வழங்கப்பட்டது.

மணிசேஞ்சர் வணிகர்கள் 28-12-2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் பென்கூலன் பள்ளிவாசலில் மற்றொரு மவ்லூது அரங்கை நடத்தினர். பள்ளிவாசல் இமாம் அண்ணல் நபிபெருமானாரின் மாண்புகளைப் போற்றி உரையாற்றினார். லுஹர் தொழுகைக்குப் பிறகு அனைவருக்கும் விருந்துபசரிப்பு நடைபெற்றது.

### சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 3-1-2015 அன்று குயின்ஸ்டவுன் அல் முஜாஹிதீன் பள்ளிவாசல் மேல்தளத்தில் மீலாது விழாவை நடத்தியது. இந்திய முஸ்லிம் அமைப்புகளின் நிர்வாகிகளும், பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் செயலாளர் ஹாஜி மு.அ. மசூது வரவேற்புரையாற்றினார். மீலாது விழாவின் நோக்கத்தையும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் முன்மாதியான பணிகளையும் அவர் எடுத்துரைத்தார். இஸ்லாமிய சமய மன்றத்தின் தலைமை முஃப்தி வெளியிட்டுள்ள மீலாது செய்தியை நினைவு கூர்ந்த அவர், உதவிப் பணிகளில் அனைவரும் ஈடுபடுவது அவசியம் என்றார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் சிறைச்சாலை கைதிகளின் மறுவாழ்வுக்கான தொண்டூழியத்தில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. சங்கத்தின் சார்பில் தற்போது 19 உறுப்பினர்கள் கைதிகளை நெறிப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



தங்கள் சங்கத்திற்கு சொந்தக் கட்டிடத்தை அமைக்கும் முயற்சியில் அக்கறைசெலுத்தி வருவதாக ஆசிரியர் மசூது தெரிவித்தார். மாணவர்களுக்கு சங்கம் ஆண்டுதோறும் அளித்துவரும் கல்வி உதவித்தொகை பற்றியும் அவர் விளக்கினார்.

பத்துநாள் மவ்லூது நிகழ்ச்சியில் பங்கேற்ற பிலால்கள் அரங்கில் சிறப்பிக்கப்பட்டனர்.

சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் நசீர்கனி, தொடக்கநிலை முதல் உயர்நிலை வரை பயிலும் பள்ளி மாணவர், மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகையை விழா மேடையில் வழங்கினார்.

உஸ்தாத் ஹாமிம் உஸ்மான் ஃபைஸி மீலாத் உரையாற்றினார். உலகுக்கு அருளாக, அற்புதத் தலைவராக அனுப்பப்பட்டவர்கள் அண்ணல் நபிகளார். அவர்களுக்குரிய சிறப்புகளைச் சொல்லிமுடிக்க இயலாது. சிறந்த முன்மாதிரி, ஒப்பற்ற தலைவர் என்று குறிப்பிட்டு பெருமானாரின் மாண்புகளை விரிவாக எடுத்துரைத்தார் அவர். பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியுடன், மாநபி அவர்களின் வாழ்க்கையையும் வழிமுறைகளையும் போதிப்பது நமது கடமை என்று வலியுறுத்தினார் ஹாமிம் உஸ்மான் ஃபைஸி.

### மஸ்ஜித் அப்துல் கஃபூர்

அப்துல் கஃபூர் பள்ளிவாசல் நிர்வாகம் 4-1-2015 அன்று பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மீலாது விழாவை நடத்தியது.

அஸர் தொழுகைக்குப் பிறகு பள்ளிவாசலின் தலைவர் எஸ்.அப்துல் ஜலீல், நிர்வாகிகளின் முன்னிலையில் மவ்லூது மஜ்லிஸ், கருத்தரங்கம் முதலான நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

பல பிரமுகர்கள் பங்கேற்ற கருத்தரங்கம், மதரஸா மாணவர்களின் கீதம் மற்றும் உரை, சிந்தனையைத் தூண்டும் பேச்சு, பரிசுக்குரிய கேள்விகள் ஆகிய நிகழ்ச்சிகள் இரவு 9:30 மணி வரை இடம்பெற்றன.

மற்ற பள்ளிவாசல்களிலும் சங்கங்களிலும் மவ்லூதும், மீலாது உரை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

# சிங்கப்பூர் நாகூர் சங்கத்தின் முப்பெரும் விழா

"எழில்மிகு சிங்கை எங்கள் தேசம்
தாய்மொழி தமிழ் எங்கள் சுவாசம்"
என்ற முழக்கத்துடன் நடைபெற்றது நாகூர் சங்கத்தின் முப்பெரும் விழா.

அமைச்சர் ஈஸ்வரன், முன்னாள் அமைச்சர் ஜெய்னுல் ஆபிதீன் ரஷீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாகூர் சங்கம், தேசிய தின விழா, நோன்புப் பெருநாள் இன்னிசை விருந்து மற்றும் தமிழ் மொழி விழா ஆகியவற்றை முப்பெரும் விழாவாக 23-08-2014 அன்று மாலை சுல்தான் மஸ்ஜித் அரங்கத்தில் நடத்தியது.

விழாவிற்கு நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடமை நிலையத் தலைவர் ஹாஜி எஸ்.எம்.ஜலீல் தலைமை தாங்கினார்.

முப்பெரும் விழா சிறப்பு மலரை முன்னாள் மூத்த துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீது வெளியிட்டு, தமிழ் முஸ்லிம்களுக்கும், சிங்கப்பூருக் கும் உள்ள நெருக்கமான தொடர்பு குறித்து விவரித்தார். முதல் மலரை சிங்கப்பூர் பல்கலைக் கழகப் பேராசிரியர், முனைவர் சுப.திண்ணப்பன் பெற்றுக்கொண்டார்.

முப்பெரும் விழா சிறப்பு ஒலிப்பேழையை பிரதமர் அலுவலக அமைச்சர், திரு. எஸ்.ஈஸ்வரன் வெளியிட, ஜமால் கஜுரா நிறுவன அதிபர் எம்.முஹம்மது ஜமால் பெற்றுக் கொண்டார். பாடல்களை இயற்றிய நாகூர் கவிஞர் சாதிக், அவற்றைப் பாடிய ஏ.ஜைனுல் ஆபிதீன் ஃபைஜி ஆகியோருக்கு அமைச்சர் பொன்னாடை போர்த்தி கவுரவித்தார்.

சிங்கப்பூர் பட்டயக் கணக்காளரும், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத் தலைவருமான முனைவர் எம்.ஏ.காதர் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு ஒலிப்பேழையில் உள்ள பாடல்களை "ஆன்மிக இசைத் தென்றல்" ஏ.ஜைனுல் ஆபிதீன் ஃபைஜி தம் இசைக் குழுவினரோடு பாடினார்.

விழாவில் முயிஸ், சிண்டா, மக்கள் கழக நற்பணி பேரவை, பல்வேறு சங்கங்கள், சமூக, அடித்தள அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவின் நிறைவாக அனைவருக்கும் உணவு மற்றும் பரிசுப் பை வழங்கப்பட்டது.

# நீரிழிவு நோய் இலவச மருத்துவக் கருத்தரங்கு

ஜமால் முஹம்மது கல்லூரி (ஜ.மு.க.) முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) 8-9-2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை, நீரிழிவு நோய் பற்றிய இலவச மருத்துவக் கருத்தரங்கு ஒன்றை பீட்டி சாலையிலுள்ள சிண்டா கலையரங்கத்தில் நடத்தியது.

சிங்கப்பூர் டான் டோக் செங் மருத்துவமனையில் பணியாற்றி வரும் பிரபல நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் டாக்டர் ஜனாப் அப்துல் ஷக்கூர், இந்தக் கருத்தரங்கை நடத்தினார். கேள்வி பதில் அங்கமும் இடம்பெற்றது. சிண்டாவின் தலைமை அதிகாரி திரு. பரதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். சங்கத்தின் துணைத்தலைவர் ஜனாப் கலந்தர் மொஹிதீன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை, சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு. நிக்சன் செல்வராஜ் வழிநடத்தினார். சங்கத்தின் செயலாளர் ஜனாப் அப்துல் சுபஹான் நன்றி கூறினார்.

கருத்தரங்கை நடத்திய டாக்டர் ஜனாப் அப்துல் ஷக்கூருக்கு, சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஜனாப்



ஹாஜி முஹம்மது ஜாபர் பொன்னாடைப் போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.

நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கில், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்று ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் தெரிவித்தார்.

# சிங்கப்பூர் தக்கலை முஸ்லிம் சங்கத்தின் வைர விழா

சிங்கப்பூரில் 1939ல் உருவான தக்கலை முஸ்லிம் சங்கத்தின் 75ஆம் ஆண்டு நிறைவு விழா சென்ற 11-10-2014 அன்று மாலை ராயல் பாம் மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

சுகாதார அமைச்சு, மற்றும் போக்குவரத்து அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர், இணைப் பேராசிரியர் முஹம்மது பைஷல் இப்ராஹீம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் பல்வேறு இந்திய முஸ்லிம், மலாய் முஸ்லிம் சங்கங்களின் பிரதிநிதிகளும், ஆதரவாளர்களும், தக்கலை முஸ்லிம் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சங்கத்தலைவர் ஹாஜி என்.எஸ்.எஸ்.முஹம்மது மீரான் வரவேற்புரை வழங்க, ஹாஜி அப்துல் மஜீதின் இன்னிசையுடன் தொடங்கிய விழாவில், ஜாமியா அறநிறுவனத்தின் துணைத்தலைவரும், தக்கலை முஸ்லிம் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினருமான முனைவர் எச்.முஹம்மது சலீம், அப்துல் கபூர் பள்ளிவாசல் இமாம் உமர் ரிஸ்வான் ஆகியோரின் உரை இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினர் இணைப் பேராசிரியர் முஹம்மது பைஷல் இப்ராஹீம் தமது உரையில்



சிங்கப்பூரில் தமிழ் முஸ்லிம்களின் சமுதாய மேம்பாட்டுப் பங்களிப்பு வரலாற்றினை சுட்டிக்காட்டினார். இத்தகைய பாரம்பரியம் தொடர்ந்து தமிழ் முஸ்லிம் இளையர்களால் கட்டிக்காக்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். கல்வி, தொழில், சமுதாயத்தொண்டு ஆகிய துறைகளில் தமிழ் முஸ்லிம்கள் முனைப்புடன் செயல்பட்டு சகோதர சங்கங்கள், மெண்டாகி, முயிஸ், ஜாமியா, சிண்டா போன்ற அமைப்புகளின் நிகழ்வுகளிலும் மேலும் வலுவாகத் தம்மை இணைத்துக்கொண்டு செயல் படவேண்டுமென தமது உரையில் கேட்டுக்கொண்டார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் பலர் நினைவுப்பரிசு வழங்கி சிறப்பிக்கப் பட்டார்கள். செயலாளர் முஹைதீன் நிசாரின் நன்றி உரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# ரிஃபாயி நாயகர் மவ்லூது

சிங்கப்பூர் ரிஃபாயி தரீக்கா சங்கம் 16-11-2014 (23முஹர்ரம்1436) ஞாயிற்றுக்கிழமை ஹலரத் சுல்தானுல் ஆரிஃபீன் ஷெய்க் சையது அஹமது கபீர் ரலி மவ்லூதை அப்துல் கபூர் பள்ளிவாசல் அடித்தள அரங்கில் நடத்தியது.

ரிஃபாயி நாயகரின் 857ஆம் ஆண்டு விழாவாகவும் சிங்கப்பூர் ரிஃபாயி தரீக்கா சங்கம் தோற்றுவிக்கப்பட்ட 49ஆம் ஆண்டை நினைவுகூரும் நிகழ்ச்சியாகவும் இது அமைந்தது.

சங்கத்தின் தலைவரும், நிர்வாகக் குழுவினரும் முன்னின்று நடத்திய மவ்லூது காலை 10:30 மணிக்குத் தொடங்கியது. உஸ்தாத் ஹாஜி ஹபீப் ஹஸன் அல் அத்தாஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தலைவர் ஹாஜி ஏ.ஜி. முஹம்மது முஸ்தபாவின் வரவேற்புரையைத்தொடர்ந்து, அப்துல் கபூர் பள்ளிவாசல் இமாம் அப்துல் அலீம் மஸ்லஹி, இமாம் உமர் ரில்வான் ஜமாலி, உஸ்தாத்



ஹாஜி ஹபீப் ஹஸன் அல் அத்தாஸ் முதலானோர் உரையாற்றினர்.

அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வழியில் ஞானச்செம்மல் ஆரிபு நாயகர் ஆற்றிய மார்க்க, ஆன்மீக, சமூக நற்பணிகளை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக துஆ ஓதப்பட்டது. லுஹர் தொழுகைக்குப் பிறகு ரிஃபாயி தரீக்கா சங்க நிர்வாகம் அனைவருக்கும் மதிய உணவு வழங்கியது.